மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
இரண்டாம் தவணைப் பரீட்சை- 2019
வணிகக்கல்வியும் கணக்கீடும்

தரம்10

60 T I, II

மூன்று மணித்தியாலயம்

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**கவனிக்க:-**

**I. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**

**I. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) (2) (3) (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

## பகுதி 1

01. பின்வருவனவற்றுள் விருப்பமாக கருதப்படுவது யாது?
(1) உணவு (2) சோறு (3) பாதுகாப்பு (4) சுகாதாரம்

02. மனித தேவையின் பண்பாகக் கருதப்படக் கூடியது,
(1) பல்வகைப்பட்டது
(2) வணிகரால் தோற்றுவிக்கக் கூடியது
(3) வரையறைக்குட்படாதது
(4) பொதுத்தன்மை கொண்டவை

03. பின்வருவனவற்றுள் பொருள் உற்பத்தி வணிகமாகக் **கருதப்பட முடியாதது** எது?
(1) மொத்த வியாபார நிறுவனங்கள்
(2) தயாரிக்கப்பட்ட உணவு
(3) மோட்டார் வாகனங்கள்
(4) கையடக்கத் தொலைபேசி

04. பொருட்கள் அல்லது சேவைகளை உற்பத்தி செய்வதற்காக வணிகங்களுக்கு தேவையான வளங்களை குறிப்பது,
(1) பௌதீக வளம்
(2) உற்பத்திக் காரணிகள்
(3) மூலதனம்
(4) மேற்கூறிய எவையுமல்ல

05. உற்பத்திக் காரணிகளில் மூலதனமாகக் கருதப்படக் கூடிய விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.
(1) கனியவளம், காலநிலை
(2) சுரங்கத் தொழிலாளர், கணக்காளர்
(3) இயந்திரம், மோட்டார் வாகனம்
(4) இயந்திரம், கனியவளம்

06. வணிகமொன்றில் வணிகத்திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்தல், சரியான தீர்மானமெடுத்தலை மேற்கொள்ளும் அக்கறை கொள்ளும் தரப்பினராகக் கருதப்படக் கூடியவர்,
(1) முகாமையாளர்
(2) உரிமையாளர்
(3) ஊழியர்
(4) வழங்குநர்

07. யாதேனும் வணிகம் ஒன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களுக்கு சமமான பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துபவர்களைக் குறிப்பது,
(1) உரிமையாளர்
(2) போட்டியாளர்
(3) வழங்குநர்கள்
(4) வாடிக்கையாளர்கள்

08. வணிகச் சூழல் காரணிகள் சில கீழே தரப்படுகின்றன.
A. வாடிக்கையாளர்
B. உரிமையாளர்
C. ஊழியர்கள்
D. போட்டியாளர்கள்



kalvi.lk

E. வழங்குநர்கள்

மேற்கூறப்பட்டவற்றுள் புறச் சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கும் விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) A, B, C (2) B, C, D (3) C, D, E (4) A, D, E

09. உள்நாட்டு உற்பத்தியாளர், நுகர்வோர், வணிகச் சமூகம் போன்றவர்களை பாதுகாக்கும் நோக்குடன் அங்கீகரிக்கப்பட்ட சட்ட விதிகள் எச்சூழல் தொகுதியைச் சார்ந்தது?

(1) பொருளாதாரச் சூழல் (3) இயற்கைச் சூழல்
(2) தொழில்நுட்பச் சூழல் (4) சட்டச்சூழல்

10. தனிநபர் வருமானத்திலிருந்து நுகர்விற்கு பயன்படுத்தி செலவிடப்படாது வைத்திருக்கும் பணப்பெறுமதி எவ்வாறு அழைக்கப்படும்?

(1) நுகர்வு (2) முதலீடு (3) சேமிப்பு (4) பரிமாற்றம்

11. பூகோளமயச் சூழலினால் ஏற்படும் பாதகமான விளைவு எனக் கருதப்படுவது யாது?

(1) நவீன நுட்பமுறைகளைப் பெற்றுக் கொள்ளல்
(2) இயந்திரப் பாவனைகள்
(3) அதிக போட்டிக்கு முகம் கொடுத்தல்
(4) நாட்டினுள் வெளிநாட்டு மூலதனம் உட்பாய்ச்சப்படல்

12. வணிக உலகில் உற்பத்தி செய்யப்படும் சில பொருட்கள், சேவைகள் மிக விரைவாக காலவதியாகும் நிலைக்கு உட்படுவதற்கு காரணமாக அமையும் சூழலாக அமைவது,

(1) பொருளாதாரச் சூழல் (3) சட்டச் சூழல்
(2) தொழினுட்பச் சூழல் (4) பூகோளச் சூழல்

13. வணிகமொன்றின் வெளியகச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் ………(1)……………., ………(2)………… என்பவற்றை அறிந்து கொள்ள முடியும்.

(1) பலம், பலவீனம் (3) பலவீனம், அச்சுறுத்தல்
(2) பலம், அச்சுறுத்தல் (4) வாய்ப்பு, அச்சுறுத்தல்

14. சன்லைற் (Sunlight) சவர்கார உற்பத்தி நிறுவனத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீட்டு இலட்சினை ஒன்று காணப்படுதலானது அந்நிறுவனத்திற்கு ஒரு,

(1) பலமாகும் (2) பலவீனமாகும் (3) வாய்ப்பாகும் (4) அச்சுறுத்தலாகும்

❖ வணிக அமைப்புக்களின் வகைகள் சில கீழே தரப்படுகின்றன. தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 15- 20 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

A. தனியாள் உரிமை வணிகம்
B. பங்குடைமை வணிகம்
C. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்
D. அரச திணைக்களங்கள்
E. அரச கூட்டுத்தாபனங்கள்

15. மேற்குறிப்பிட்ட வணிக அமைப்புக்களில் இலாப நோக்கற்ற பொதுத்துறை வணிக அமைப்புக்களாகக் கருதப்படுபவை,

(1) A. B (2) B. C (3) D, E (4) C, D

16. வாண்மைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் ஆரம்பிப்பதற்கு பொருத்தமான வணிக அமைப்பு,

(1) A (2) B (3) C (4) E

17. வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்பினைக் கொண்டதும், சட்ட ஆளுமையற்ற அமைப்பாகவும் காணப்படும் தனியார் துறை அமைப்புக்களாகக் கருதப்படக் கூடியவை,

(1) A, B (2) D, E (3) A, B. C (4) C, D, E



kalvi.lk

18. தொடர்ந்தியங்கும் தன்மை கொண்டதும், நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்டதுமான தனியார்துறை வணிக அமைப்பைக் குறிப்பது,

(1) A (2) B (3) C (4) D

19. விசேட சட்டமொன்றினூடாக அல்லது தற்போது நடைமுறையிலுள்ள பொதுச்சட்டத்தினூடாக உருவாக்கக்கூடிய வணிக அமைப்பு,

(1) E (2) A (3) D (4) C

20. பாரிய மூலதனம் தேவைப்படும் நீண்டகால அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளும் பொதுத்துறை வணிக அமைப்பைக் குறிப்பது,

(1) A (2) D (3) E (4) B

21. கூட்டுறவு அமைப்பில் காணப்படக் கூடிய விஷேட பண்புகளாக கருதப்பட முடியாதது,

(1) இலாபமும், உரிமையும் அதிகமானவர்களிடையே பகிரப்படல்
(2) ஜனநாயக நிருவாகம் நடைபெறுகின்றமை
(3) சுயமான திறந்த அங்கத்துவம்
(1) அங்கத்தவர்களுக்கு சமமான உரிமை

22. கணக்கீட்டின் பிரதான நோக்கமாகக் கருதப்படக்கூடியது,

(1) வணிகத்தின் நிதி நிலைமையை அறிவதற்கு
(2) சட்டத் தேவைப்பாடுகளை நிறைவேற்றல்
(3) அக்கறை கொண்ட தரப்பினருக்கு தேவையான பல்வேறு தகவல்களை வழங்க
(4) இலாபத்தை சரியாக கணக்கிடுவதற்கு

23. வணிகமொன்றில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்படுகின்றன இவற்றில் கணக்கீட்டில் கருத்தில் கொள்ளப்படாத கொடுக்கல் வாங்கலை தெரிவு செய்க,

(1) ரூ 5000 கடன் வருமதியொன்று அறவிடமுடியாக் கடனாக காணப்படல்
(2) மாதாந்த வாடகைக் கொடுப்பனவு ரூ 10 000
(3) முகாமை சாரா ஊழியர் எண்ணிக்கை 20 ஆகும்
(4) ரூ 10 000 பெறுமதியான பொருட் தொகுதியொன்று அழிவுறுதல்

24. பின்வரும் பண்புகளை கருத்திற் கொள்க.

- கடந்த கால கொடுக்கல் வாங்கல்களின் விளைவாகும்
- வணிகத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாகும்.
- எதிர்கால பொருளாதார நலன்களை கொண்டுவருதல்

மேற்படி பண்புகளை காணக்கூடியது

(1) சொத்துக்களில் ஆகும் (3) பொறுப்புக்களிலாகும்
(2) வருமானமாகும் (4) செலவினமாகும்

25. பின்வருவனவற்றுள் நடைமுறைச் சொத்தினை மட்டும் கொண்ட விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) கடன்பட்டோர், காசுமீதி (3) காணிகட்டிடம், இயந்திரம்
(2) கடன்கொடுத்தோர், அட்டுறுச்செலவுகள் (4) வங்கிக்கடன், வங்கிமேலதிகப் பற்று

26. ஆடையணிகளை விற்பனை செய்யும் வணிகமொன்று வணிகத்தை விரிவுபடுத்துவதற்காக வங்கியில் ரூ 100000 கடன் ஒன்றை பெறுகின்றது. இது குறிப்பிட்ட வணிகத்திற்கு ஒரு,

(1) நடைமுறை பொறுப்பாகும் (3) நடைமுறைச் சொத்தாகும்
(2) நடைமுறை அல்லாப் பொறுப்பாகும் (4) நடைமுறை அல்லாச் சொத்தாகும்

27. வருமானக் கணக்குகளை மட்டும் உள்ளடக்கிய விடைத்தொகுதியினைத் தெரிவு செய்க.

(1) மூலதனக் கணக்கு, பற்றுக் கணக்கு
(2) விற்பனைக் கணக்கு, பெற்றகழிவுக் கணக்கு
(3) வங்கிக்கடன் கணக்கு, கடன்கொடுத்தோர் கணக்கு
(4) கடன்பட்டோர் கணக்கு, காசுக் கணக்கு



kalvi.lk

28. வணிக நிறுவன மொன்று மீள் விற்பனைக்கான பண்டங்களைக் காசு செலுத்திக் கொள்வனவு செய்துள்ளது. இக் கொடுக்கல் வாங்கல் தொடர்பாகப் பின்வருவனவற்றுள் சரியானது.
(1) நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி அதிகரிக்கும்
(2) நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதி குறையும்
(3) நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதியில் மாற்றமில்லை
(4) நடைமுறைச் சொத்துக்களும் நடைமுறைப் பொறுப்புக்களும் அதிகரிக்கும்

❖ 29, 30, 31 ஆம் வினாக்களுக்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.
A. உரிமையாளர் இட்ட மூலதனம் ரூபா. 100 000
B. வங்கிக்கடன் பெற்றது ரூபா. 30 000
C. உரிமையாளர் பற்று ரூபா 5 000
D. நிமலிடம் பொருள் கொள்வனவு ரூபா 15 000

29. B என்ற எழுத்தினால் குறிக்கப்படும் கொடுக்கல் வாங்கலை கணக்கீட்டு சமன்பாட்டில் சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

| | சொத்து | = | உரிமையாண்மை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | 30000 | = | 30000 | + | - |
| (2) | 30000 | = | - | + | 30 000 |
| (3) | - | = | 30000 | + | 30 000 |
| (4) | – 30000 | = | - | + | 30 000 |

30. உரிமைக் கணக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் கொடுக்கல், வாங்கல்களை உள்ளடக்கிய விடைத்தொகுதியினை தெரிவு செய்க.
(1) D, C (2) C, D (3) A, B (4) A, C

31. கொடுக்கல் வாங்கல் D க்கான சரியான இரட்டைப் பதிவாக அமைவது,
(1) இருப்புக்கணக்கு வரவு ரூபா 15 000
காசுக்கணக்கு செலவு ரூபா 15 000
(2) இருப்புக்கணக்கு வரவு ரூபா 15 000
நிமல்கணக்கு செலவு ரூபா 15 000
(3) கொள்வனவுக்கணக்கு வரவு ரூபா 15 000
காசுக்கணக்கு செலவு ரூபா 15 000
(4) கொள்வனவுக்கணக்கு வரவு ரூபா 15 000
நிமல் கணக்கு செலவு ரூபா 15 000

32. பொறுப்பொன்று குறையும் அதேவேளை, காசுச் சொத்து குறையும் இரட்டை விளைவினைக் காட்டும் சரியான கொடுக்கல் வாங்கலொன்றைத் தெரிவு செய்க.
(1) ஊழியருக்கு சம்பளம் வழங்குதல்
(2) வங்கியிலிருந்து கடன் பெறல்
(3) வங்கிக் கடனை மீளச் செலுத்துதல்
(4) கடனுக்கு விற்பனை செய்தல்

33. X நிரல் முதன்மை ஏடுகளையும் Y நிரல் மூல ஆவணங்களையும் கொண்டுள்ளது.

| X நிரல் | Y நிரல் |
|---|---|
| 1. காசேடு | A. நாட்குறிப்புக் கைச்சாத்து |
| 2. வங்கிக்கணக்கு | B. பட்டியல் |
| 3. விற்பனை நாளேடு | C. வங்கிக்கூற்று |
| 4. பொதுநாட்குறிப்பேடு | D. பற்றுச்சீட்டு |

முதன்மை ஏடுகளுக்கு பொருத்தமான மூல ஆவணங்களை சரியான ஒழுங்கில் காட்டும் விடையினைத் தெரிவு செய்க.
(1) D, B, C, A (2) D, C, B, A (3) D, A, B, C (4) D, C, A, B



kalvi.lk

34. கணக்கியலில் மூலஏடாகவும், பேரேடாகவும் செயற்படும் ஓர் ஏடு?
(1) கொள்வனவு நாளேடு (2) விற்பனை நாளேடு (3) பொதுநாட்குறிப்பேடு (4) காசேடு

35. காசுக் கொடுப்பனவிற்கான மூல ஆவணமாக அமைவது,
(1) பட்டியல் (2) கொடுப்பனவுக் கைச்சாத்து (3) பற்றுச்சீட்டு (4) வைப்புச்சீட்டு

36. கடன் கொடுப்பனவு செய்யும் காலத்தினுள் கடன்பட்டோரால் கடன்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டால் கடனில் இருந்து குறைத்து வழங்கும் கழிவினைக் குறிப்பது,
(1) கொடுத்த கழிவு (2) பெற்ற கழிவு (3)காசுக் கழிவு (4) வியாபாரக் கழிவு

37. வணிகமொன்றின் சில்லறைக் காசேட்டின் வசக்கட்டு ரூ.4500. குறித்த ஒரு மாதத்தின் செலவுத் தொகை ரூ.4100 எனின் மீள் நிரப்பும் தொகை யாது?
(1) ரூ. 4500 (2) ரூ. 8600 (3) ரூ. 400 (4) ரூ. 4100

38. சில்லறைக் காசேட்டின் மீள் நிரப்பலுக்கான இரட்டைப் பதிவானது முறையே,
(1) காசேடு – வரவு, சில்லறை காசேடு செலவு
(2) உரிய செலவுக் கணக்கு வரவு, சில்லறை காசேடு செலவு
(3) சில்லறை காசேடு வரவு, காசேடு செலவு
(4) சில்லறை காசேடு வரவு, உரிய செலவுக் கணக்கு செலவு

39. வங்கியில் பணத்தை வைப்பிலிட்டமைக்கான கணக்கு பதிவுகளை மேற்கொள்ளும் போது பயன்படுத்தும் மூலஆவணமாக அமைவது,
(1) பற்றுச்சீட்டு (2) கைச்சாத்து (3) பட்டியல் (4) வைப்புச் சீட்டு

40. விற்பனை மூலம் பெற்ற ரூ 20,000 பெறுமதியான காசோலை அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்புச் செய்யப்படுவதற்கான இரட்டைப் பதிவாக அமைவது,
(1) வங்கிக் கணக்கு வரவு ரூ 20,000
விற்பனைக் கணக்கு செலவு ரூ 20,000
(2) காசுக் கணக்கு வரவு ரூ 20,000
விற்பனைக் கணக்கு செலவு ரூ 20,000
(3) விற்பனைக் கணக்கு வரவு ரூ 20,000
வங்கிக் கணக்கு செலவு ரூ 20,000
(4) விற்பனைக் கணக்கு வரவு ரூ 20,000
காசுக் கணக்கு செலவு ரூ 20,000


kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை- 2019
### வணிகக்கல்வியும் கணக்கீடும்

தரம்10 பகுதி 11

**அறிவுறுத்தல்:-**
**முதலாம் வினா உட்பட, பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**வினா இல 01**

❖ **பின்வரும் சம்பவத்தை பயன்படுத்தி (1) தொடக்கம் (10) வரையுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

அருண் என்பவர் ''அருண்கவி சுவையூற்று'' என்னும் பெயரில் குளிர்களி நிலையம் ஒன்றை நடாத்தி வருகின்றார். இவர் பல்வேறுபட்ட ஐஸ்கிறீம் வகைகளையும், இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்ட குளிர்பானங்கள் மற்றும் சிற்றுண்டி வகைகளையும் விற்பனை செய்து வருகின்றார். அருணின் தயாரிப்புகள் இயற்கையானதாகவும், தரம் மற்றும் சுவையானதாகவும் காணப்பட்டதோடு தற்போதைய கோடை காலத்திற்கு பொருத்தமான உற்பத்திகளாக இருந்தமையினால் அருணின் வணிகத்திற்கு வருகை தரும் வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. மேலும் வணிகத்தை விரிவுபடுத்த எண்ணிய அருண் உணவு உற்பத்தி நுட்பம் தொடர்பான சிறப்புப் பட்டம் பெற்ற தனது நண்பனான சாரங்கனை பங்காளராக இணைத்துக்கொண்டார். இவர் குளிர்களி நிலையத்தின் உணவு உற்பத்தி மற்றும் விநியோகம் என்பவற்றிற்கு பொறுப்பாகச் செயற்பட்டார்.

வணிகத்தில் காணப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள் வருமாறு:-

| | |
|---|---|
| காணிகட்டிடம் | ரூ 250 000 |
| இயந்திரங்கள் | ரூ 120 000 |
| மோட்டார் வாகனங்கள் | ரூ 100 000 |
| காசு மீதி | ரூ 23 000 |
| கடன்பட்டோர் | ரூ 34 000 |
| கடன்கொடுத்தோர் | ரூ 20 000 |
| வங்கிக்கடன் | ரூ 30 000 |

1. அருண் சாரங்கனை இணைத்துக்கொண்ட பின்னர் மேற்குறிப்பிட்ட வணிகம் எவ்வாறான வணிக அமைப்பாக மாற்றமடைகின்றது?
2. குறிப்பிட்ட வணிகத்திற்கு காணப்படும் பலம் ஒன்றையும், வாய்ப்பு ஒன்றையும் குறிப்பிடுக.
3. தற்போது காணப்படும் நிலையில் குறிப்பிட்ட வணிகத்தின் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.
4. மேற்படி வணிகம் பங்குடைமை உறுதி ஒன்றினை ஏற்படுத்த வேண்டுமா? இது தொடர்பாக உமது கருத்தினை வழங்குக.
5. கொடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதியைக் கணிப்பிடுக.
6. தற்போது குறிப்பிட்ட நிறுவனத்தின் உரிமையின் (மூலதனத்தின்) பெறுமதி யாது?
7. சாரங்கன் மூலதனமாக ரூ 200 000 இடுகின்றார் எனின் இக் கொடுக்கல் வாங்கல் எப்பேரேட்டுக் கணக்குகளில் தாக்கம் செலுத்தும் என்பதைக் குறிப்பிடுக.
8. நடைமுறை அல்லாப் பொறுப்பு ஒன்றினைக் குறிப்பிடுக.
9. நடைமுறைச் சொத்தின் பெறுமதியைக் குறிப்பிடுக.
10. நடைமுறைப் பொறுப்பின் பெறுமதியைக் கணிப்பிடுக.

(10×2=20 புள்ளிகள்)

**பகுதி 11**
**வணிகக்கல்வி**
**(இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக)**

**வினா இல 02**

1. நிகழ்காலத்தில் மனிதனது தேவைகளும், எண்ணிறைந்த விருப்பங்களும் **வணிகத்தினால்** பூர்த்தி செய்யப்படுகின்றன. வணிக எண்ணக்கருவின் அடிப்படையில் பண்டமாற்று முறையில் ஆரம்பித்த வணிகமானது இன்று இலத்திரனியல் வணிகமாக மாற்றமடைந்துள்ளது.

(அ) மேற்குறிப்பிட்டுள்ள கூற்றில் தடித்த கோடிடப்பட்ட சொற்களால் குறிப்பிடப்படும் கருத்து யாது? (1 புள்ளி)



kalvi.lk

(ஆ) ஒரு மனிதனால் கட்டாயம் பூர்த்தி செய்யப்பட வேண்டியவை தேவைகள் ஆகும். அவை பூர்த்தி செய்யப்படும் வடிவங்கள் விருப்பங்களாகும். தேவை விருப்பங்களுக்கிடையிலான இரண்டு வேறுபாடுகளைத் தருக. (1 புள்ளி)

2. வணிகமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மைக்கு ஏற்ப இரண்டு வகைப்படுத்தலாம். அவை எவை? (2 புள்ளி)

3. கல்யாணி தளபாட உற்பத்தி நிலையம் வீட்டு, அலுவலக தளபாட பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு வணிக அமைப்பாகும். அதன் உற்பத்தி காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவற்றுக்கு உதாரணம் ஒன்று வீதம் தருக. (2 புள்ளி)

4. நீர் உமது பாடசாலை சிற்றுண்டிச் சாலையின் உரிமையாளர் ஒருவர் எனக் கருதுக. உம்மிடம் இருந்து வாடிக்கையாளராகிய மாணவர்கள் எதிர்ப்பார்க்கும் விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 03**

1. வணிகச் சூழலில் புறச் சூழலில் உள்ளடங்கும் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
2. பின்வரும் சட்டதிட்டங்களை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள பதவிகள் அல்லது நிறுவனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
   (அ) 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்
   (ஆ) 2009 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்.
   (2புள்ளி)
3. சிறிய அளவிலான இரசாயன மருந்துகள் பாவிக்காத பழச்செய்கை உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடும் உற்பத்தியாளர் என உம்மைக் கருதி உமது வணிக நடவடிக்கைகளில் எதிர்கொள்ளும் பலம், பலவீனம், வாய்ப்பு மற்றும் அச்சுறுத்தலுக்கு உதாரணங்கள் ஒவ்வொன்று வீதம் தருக. (2 புள்ளி)
4. (அ) பொருளாதாரச் சூழல் காரணிகளுக்கு நான்கு உதாரணம் தருக. (1 புள்ளி)
   (ஆ) உள்நாட்டு வணிகத்தில் பூகோளமயச் சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகள் இரண்டு தருக. (1 புள்ளி)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**வினா இல 04**

❖ வணிக நிறுவனங்கள் சிலவற்றின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.
குமரன் ஸ்ரோர்ஸ்
இலங்கை தபால் திணைக்களம்
இலங்கை மின்சார சபை
சில்வா அன்ட் பிறதர்ஸ்

1. மேற்குறிப்பிட்ட வணிக அமைப்புக்கள் எவ்வகை வணிக அமைப்பினைச் சார்ந்தது என்பதைக் குறிப்பிடுக. (2 புள்ளி)
2. மேற்குறிப்பிட்ட வணிக அமைப்புக்களை உரிமை அடிப்படையில் வகைப்படுத்துக. (2 புள்ளி)
3. மேலே குறிப்பிட்ட வணிக அமைப்புக்கள் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் ஒன்று வீதம் தருக. (2 புள்ளி)
4. சண்முகம் பிரணவன் என்பவர் ஒரு தையல் கடையொன்றை "ஸ்மார்ட் டெய்லர்ஸ்" எனும் பெயரில் ஆரம்பிக்க உத்தேசித்துள்ளார்.
   (அ) இவ்வணிகத்தினை பதிவு செய்தல் வேண்டுமா? காரணம் தருக. (1 புள்ளி)
   (ஆ) மேலே குறிப்பிட்ட நிறுவனம் பதிவு செய்யப்பட வேண்டுமாயின், பதிவு செய்யப்பட வேண்டியதற்குரிய சட்டத்தினையும் பதிவு செய்யும் அலுவலகத்தையும் குறிப்பிடுக. (1 புள்ளி)

(மொத்தம் 08 புள்ளிகள்)


kalvi.lk

பகுதி 11

**கணக்கியல்**

**( இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)**

**வினா இல 05**

1. (அ) கணக்கீடு என்பதால் கருதப்படுவது யாது?
   (ஆ) வணிகம் ஒன்றின் உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
   (2 புள்ளி)
2. (அ) வியாபார பொறுப்புக்களில் காணக்கூடிய பண்புகள் இரண்டு தருக.
   (ஆ) பொறுப்புக்களை இரு பிரதான பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவற்றினைக் குறிப்பிடுக.
   (2 புள்ளி)
3. (அ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் குறிப்பிடுக.
   1) ரூபா 500 000 மூலதனமிடல்
   2) ரூபா 200 000 வங்கிக் கடன் பெறல்
   3) ரூபா 50 000 க்கு காசுக்கு பொருள் கொள்வனவு
   4) ரூபா 10 000 கட்டிட வாடகை செலுத்துதல்

   விடையளிப்பதற்கு பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாட்டு மாதிரியைப் பயன்படுத்துக.

| கொடுக்கல் வாங்கல் இல | சொத்து = | உரிமை + | பொறுப்பு |
|---|---|---|---|
| 1) | | | |
| 2) | | | |
| 3) | | | |
| 4) | | | |

(02 புள்ளிகள்)

   (ஆ) மேலே (அ) பகுதியில் குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பயன்படுத்தி கீழுள்ள அட்டவணையை பூர்த்தி செய்க.

| கொடுக்கல் வாங்கல் | வரவு வைக்க வேண்டிய கணக்கு | செலவு வைக்க வேண்டிய கணக்கு |
|---|---|---|
| 1) | | |
| 2) | | |
| 3) | | |
| 4) | | |

(02 புள்ளிகள்)

4. (அ) கரன் வணிகத்தின் பின்வரும் விடயங்களை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எனும் அடிப்படையில் வகைப்படுத்துக.

| | | |
|---|---|---|
| வங்கிக் கடன் | மோட்டார் கார் | கடன் கொடுத்தோர் |
| கடன் பட்டோர் | கட்டிடம் | வங்கி மேலதிகப்பற்று |
| நிலையான வைப்பு | அட்டுறு செலவுகள் | |

(02 புள்ளிகள்)

   (ஆ) விமலன் வணிகத்தின் 2018 ஆம் ஆண்டிற்குரிய தகவல்கள் சில கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| 2018.01.01 இல் மூலதனம் | ரூ 430 000 |
| நிதியாண்டு வருமானங்கள் | ரூ 240 000 |
| நிதியாண்டு செலவினங்கள் | ரூ 150 000 |
| மேலதிக மூலதனம் இட்டது | ரூ 60 000 |

❖ 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியில் உரிமையாளரின் உரிமையைக் கணிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 06**

1. (அ) மூல ஆவணங்கள் என்றால் என்ன?
   (ஆ) பொறுப்புக் கணக்குகள் தொடர்பில் இரட்டைப் பதிவுத் தத்துவத்தை எழுதுக.
   (02 புள்ளிகள்)
2. பின்வருவன வெதுப்பக உற்பத்தி நிறுவனமொன்றில் காணப்பட்ட பேரேட்டுக் கணக்குகள் ஆகும்.

| | | |
|---|---|---|
| சம்பளக் கணக்கு | கடன்பட்டோர் கணக்கு | கட்டிடக் கணக்கு |
| வங்கிக்கடன் கணக்கு | மின்சாரக் கட்டணக் கணக்கு | அட்டுறுச் செலவுக் கணக்கு |
| விற்பனைக் கணக்கு | பெற்ற கழிவுக் கணக்கு | |

   மேற்குறித்த கணக்குகளை பின்வரும் வகையில் வகைப்படுத்திக் காட்டுக.

   1) சொத்துக் கணக்குகள்     3. வருமானக் கணக்குகள்



kalvi.lk

2) பொறுப்புக் கணக்குகள் 4. செலவுக் கணக்குகள்

(02 புள்ளிகள்)

3. (அ) பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் கீர்த்தி ஆடை உற்பத்தி நிறுவனத்தில் இடம்பெற்றவையாகும்.
 1) காசு விற்பனைகள் ரூ 20 000
 2) காசோலை மூலம் சம்பளக் கொடுப்பனவு ரூ 5 000
 மேற்குறித்த கொடுக்கல் வாங்கலுக்குரிய மூல ஆவணத்தையும், மூலப் பதிவேட்டையும் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(ஆ) 1) காசுக் கழிவின் வகைகளைக் குறிப்பிடுக.
 2) பெற்ற கழிவிற்கான இரட்டைப் பதிவினைத் தருக.

(02 புள்ளிகள்)

4. கபிலன் வணிகத்தில் 2018 ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல், வாங்கல் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 01.01.2018 | காசு மீதி | ரூ 120 000 |
| 02.01.2018 | காசுக்கு பொருள் கொள்வனவு | ரூ 40 000 |
| 03.01.2018 | வங்கிக் கடன் பெற்றது | ரூ 25 000 |
| 04.01.2018 | சம்பளக் கொடுப்பனவு | ரூ 20 000 |
| 05.01.2018 | கடன்பட்டோரிடம் பெற்ற காசு | ரூ 15 000 |
| 06.01.2018 | காசுக்கு விற்பனை | ரூ 50 000 |
| 07.01.2018 | மின்சாரக் கொடுப்பனவு | ரூ 5 000 |

❖ வேண்டப்படுவது:-
ஜனவரி முதல் வாரத்திற்கான காசுக் கணக்கினை தயாரித்து காசுமீதியினைக் கணிப்பிடுக.

( 02 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**வினா இல 07**

1. அ) சில்லறைக் காசு வசக்கட்டு என்பதனால் கருதப்படுவது யாது?
 ஆ) வங்கியின் நடைமுறைக் கணக்கினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் இரண்டின் பெயரகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

2. வானதி வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டுத் தொகை ரூ 2000 ஆகும். கிடைக்கப்பெற்ற முற்பணக் காசின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சில்லறைக் காசுக் கொடுப்பனவுகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| எழுதுகருவி | ரூ 250 |
| சுத்திகரிப்புச் செலவுகள் | ரூ 400 |
| உபசரணைச் செலவுகள் | ரூ 400 |
| போக்குவரத்துச் செலவுகள் | ரூ 600 |
| | ரூ1650 |

மேற்குறித்த தகவலின்படி குறிப்பிட்ட வணிகத்தின் சில்லறைக் காசுக் கட்டுநிதி (வசக்கட்டு) மீள்நிரப்பல் தொகை எவ்வளவு? (02 புள்ளிகள்)

3. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டுக் கணக்குகளில் பதிந்து காட்டுக.

| | | |
|---|---|---|
| 01.02.2018 | குமரனுக்கு விற்பனை | ரூ 10 000 |
| 03.02.2018 | அமலனிடம் கொள்வனவு | ரூ 12 000 |
| 05.02.2018 | காசுக்கு விற்பனை | ரூ 24 000 |
| 07.02.2018 | சம்பளக் கொடுப்பனவு | ரூ 15 000 |

(04 புள்ளிகள்)

4. பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் விமல் வணிகத்தில் 2018 ஏப்ரல் மாதத்தில் இடம்பெற்றன.

| | |
|---|---|
| 2018.04.01 | ரூ 25000 வங்கியில் வைப்புச் செய்து நடைமுறைக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. |
| 2018.04.07 | கடன்பட்டோரான சரவணனிடமிருந்து கிடைக்கப் பெற்ற 345 இலக்கம் கொண்ட காசோலை ரூ 6000 வங்கியில் வைப்புச் செய்யப்பட்டது. |
| 2018.04.11 | விற்பனைக்காக கிடைக்கப்பெற்ற 400 இலக்கம் கொண்ட காசோலை ரூ 25000 பெறுமதியான காசோலை ஒன்று அச்சந்தர்ப்பத்திலேயே வங்கியில் வைப்பிலிடப்பட்டது. |
| 2017.04.20 | மின்சாரக் கட்டணமாக 425 ஆம் இலக்கம் கொண்ட ரூ 6000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. |

மேற்குறிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை வங்கிக் கணக்கில் பதிந்து காட்டுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

**மாகாணக்கல்வித் திணைக்களம்**

**வடக்கு மாகாணம்**

# இரண்டாம் தவணைப் பரீட்சை- 2019

# வணிகக்கல்வியும் கணக்கீடும்

## தரம் 10 - பகுதி 1 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 2 | 11. | 3 | 21. | 1 | 31. | 4 |
| 2. | 4 | 12. | 2 | 22. | 3 | 32. | 3 |
| 3. | 1 | 13. | 4 | 23. | 3 | 33. | 2 |
| 4. | 2 | 14. | 1 | 24. | 1 | 34. | 4 |
| 5. | 3 | 15. | 3 | 25. | 1 | 35. | 2 |
| 6. | 1 | 16. | 2 | 26. | 2 | 36. | 1 |
| 7. | 2 | 17. | 1 | 27. | 2 | 37. | 4 |
| 8. | 4 | 18. | 3 | 28. | 3 | 38. | 3 |
| 9. | 4 | 19. | 1 | 29. | 2 | 39. | 4 |
| 10. | 3 | 20 | 2 | 30. | 4 | 40. | 1 |

## பகுதி 11

**வினா இல 01**

1. பங்குடைமை வணிகம் (02 புள்ளிகள்)
2. பலம்:- இயற்கை பானங்கள், ஐஸ்கிறீம் வகைகளை தரமாகவும், சுவையாகவும் தயாரித்தல்
   சாரங்கனின் கல்வியறிவு (01 புள்ளி)
   வாய்ப்பு:- வாடிக்கையாளர் அதிகரித்தல், இயற்கை காலநிலை பொருத்தமாகவிருத்தல்
3. இலகுவில் ஆரம்பிக்க முடிதல் (01 புள்ளி)
   அதிக மூலதனத்தை திரட்ட முடிதல்
   பல்வேறு திறன்களை பயன்படுத்த முடிதல்
   கூட்டாக தீர்மானம் மேற்கொள்ள முடிதல் (2×1= 2 புள்ளிகள்)
4. ஆம் (01 புள்ளி)
   மோசடி தவிர்ப்புச் சட்டத்தின் கீழ் பங்குடைமையின் ஆரம்ப மூலதனம் ரூ 1000 க்கு மேற்படின் பங்குடைமையானது எழுத்து மூலமான ஒப்பந்தத்தை கொண்டிருக்க வேண்டும். (01 புள்ளி)
5. ரூ 470 000 (02 புள்ளிகள்)
6. ரூ 477 000 (02 புள்ளிகள்)
7. உரிமைக் கணக்குகள் அல்லது மூலதனக் கணக்குகள்
   காசுக் கணக்கு அல்லது சொத்துக் கணக்குகள் (2×1=2 புள்ளிகள்)
8. வங்கிக்கடன் (02 புள்ளிகள்)
9. ரூ 57 000 (02 புள்ளிகள்)
10. ரூ 20 000 (02 புள்ளிகள்)

**வினா இல 02**

1. (அ) மனிதனது தேவைகளை நிறைவு செய்வதற்கு அவசியமான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல், விநியோகம் செய்தல் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகள் வணிகம் எனப்படும். (01 புள்ளி)

   (ஆ)

| | தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|---|
| a) | அத்தியாவசியமானது | அத்தியாவசியமானதன்று |
| b) | பொதுத்தன்தையானது | பொதுத்தன்மையானதல்ல |
| c) | தோற்றுவிக்க முடியாதிருத்தல் | தோற்றுவிக்கக் கூடியது |
| d) | வயைறுக்கப்பட்டவை | வரையறுக்கப்படாதது (2×1/2=01 புள்ளி) |



kalvi.lk

2. பொருள் உற்பத்தி வணிகம்
   சேவை உற்பத்தி வணிகம் (2×1= 2 புள்ளிகள்)
3. நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகியவற்றிற்கு- 01 புள்ளி
   பொருத்தமான உதாரணங்களுக்கு – 01 புள்ளி
4. தரமான பொருட்களைப் பெறல்
   நியாயமான விலையில் பெறல் (2×1= 2 புள்ளிகள்)

**வினா இல 03**

1. வாடிக்கையாளர் வழங்குநர்கள் போட்டியாளர்கள்
   அரசியல் சூழல் சட்டச் சூழல் பொருளாதாரச் சூழல்
   தொழினுட்பச் சூழல் பூகோளச் சூழல் (4×1/2=02 புள்ளிகள்)

2. (அ) கம்பனி பதிவாளர் நாயகம் (01 புள்ளி)
   (ஆ) நுகர்வோர் விவகார / பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை (01 புள்ளி)
3. பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் ஆகிய நான்கிற்கும் பொருத்தமான உதாரணங்களிற்கு ½ புள்ளி வீதம் 02 புள்ளிகள்
4. (அ) வட்டிவீதம் பணவீக்கம் வருமானப்பரம்பல் சேமிப்புகள்
   நிறைதொழில் மட்டம் சர்வதேச தொடர்புகள் அந்நிய செலாவாணி மாற்றுவீதம்
   (நான்கிற்கு 01 புள்ளி)

   (ஆ) நவீன தொழில் நுட்பம் பெறல்
   தரமான மூலப்பொருட்களை பெற முடிதல்
   வெளிநாட்டு மூலதனம் உட்பாய்ச்சப் படல்
   வெளிநாட்டுச் சந்தைகளைப் பெற முடிதல் (2×1/2=01 புள்ளி)

**வினா இல 04**

1. குமரன் ஸ்ரோர்ஸ் - தனியுடைமை வணிகம்
   இலங்கை தபால் திணைக்களம்- அரச திணைக்களங்கள்
   இலங்கை மின்சார சபை அரச கூட்டுத்தாபனம்
   சில்வா அன்ட் பிறதர்ஸ் பங்குடைமை வணிகம் (4×1/2=02 புள்ளிகள்)
2. அரச துறை:- இலங்கை தபால் திணைக்களம்
   இலங்கை மின்சார சபை
   தனியார் துறை;-தனியுடைமை வணிகம்
   பங்குடைமை வணிகம் (4×1/2=02 புள்ளிகள்)
3. குமரன் ஸ்ரோர்ஸ் - தனியொருவரால் ஈடுபடுத்தப்படும்
   இலங்கை தபால் திணைக்களம்:-முழுமையாக அரசினால் ஈடுபடுத்தப்படும்
   சில்வா அன்ட் பிறதர்ஸ்:- பங்காளர்களால் ஈடுபடுத்தப்படும.
   இலங்கை மின்சார சபை:- பாரியளவு அரசினாலும், சிறியளவில் தனியாரினாலும் ஈடுபடுத்தப்படும்.
   (4×1/2=02 புள்ளிகள்)

4. (அ) ஆம். பங்காளரின் முழுமையான பெயரை ஒத்திராத காரணத்தனால் பதிவு செய்யப்படல் வேண்டும்.
   (01 புள்ளி)
   (ஆ) 1918 ஆம் 6 ஆம் இலக்க வியாபார பெயர்ப் பதிவு கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரதேச செயலக காரியாலயத்தில் பதிவு செய்தல் வேண்டும். (01 புள்ளி)

**வினா இல 05**

1. (அ) வணிக அலகொன்றின்மீது அக்கறை செலுத்தும் பிரிவினர்கள் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பயனுள்ள தகவல்களை வழங்குதல் கணக்கீடு எனப்படும். (01 புள்ளி)

   (ஆ) மேலதிக மூலதனமிடல் வருமானங்கள்
   பற்றுதல்கள் செலவினங்கள் (2×1/2=01 புள்ளி)



kalvi.lk

2. (அ) கடந்த காலக் கொடுக்கல் வாங்கலொன்றின் விளைவாக ஏற்படுதல்
தீர்ப்பனவின் போது வணிகத்தின் வளங்களிலிருந்து ஒரு பகுதி வெளிச்செல்லல்
நிகழ்காலக் கடப்பாடு கொண்டதாகவிருத்தல் (2×1/2=01 புள்ளி)

(ஆ) நடைமுறைப் பொறுப்பு
நடைமுறையல்லாப் பொறுப்பு (2×1/2=01 புள்ளி)

3. (அ)

| **கொடுக்கல் வாங்கல் இல** | **சொத்து =** | **உரிமை +** | **பொறுப்பு** |
|---|---|---|---|
| 1) | 500000 | 500000 | |
| 2) | 200000 | | 200000 |
| 3) | 50000<br>- 50000 | | |
| 4) | -10000 | - 10000 | |

(4×1/2=02 புள்ளிகள்)

(ஆ)

| **கொடுக்கல் வாங்கல்** | **வரவு வைக்க வேண்டிய கணக்கு** | **செலவு வைக்க வேண்டிய கணக்கு** |
|---|---|---|
| 1) | காசுக் கணக்கு | மூலதனக் கணக்கு |
| 2) | காசுக் கணக்கு | வங்கிக் கடன் கணக்கு |
| 3) | சரக்கு/ கொள்வனவு கணக்கு | காசுக் கணக்கு |
| 4) | வாடகைக் கணக்கு | காசுக் கணக்கு |

(4×1/2=02 புள்ளிகள்)

4. (அ)

| **பொறுப்புக்கள்** | **சொத்துக்கள்** |
|---|---|
| வங்கிக் கடன் | மோட்டார் கார் |
| கடன் கொடுத்தோர் | கடன் பட்டோர் |
| வங்கி மேலதிகப் பற்று | கட்டிடம் |
| அட்டுறு செலவுகள் | நிலையான வைப்பு (02 புள்ளிகள்) |

(ஆ) 2018.01.01 இல் மூலதனம் ரூ 430 000
நிதியாண்டு வருமானங்கள் ரூ 240 000
மேலதிக மூலதனம் இட்டது ரூ 60 000
ரூ 730 000 ⟶ (01 புள்ளி)
நிதியாண்டு செலவினங்கள் ரூ 150 000
உரிமை ரூ 580 000 ⟶ (01 புள்ளி)

**வினா இல 06**

1. (அ) வணிகத்தில் கொடுக்கல் வாங்கல் நடைபெறும்போது அக்கொடுக்கல் வாங்கல் தொடர்பான சகல விபரங்களையும் உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டு அப்பிரிவினது பொறுப்பு வாய்ந்த அதிகாரியினால் கையொப்பமிட்டு பேணப்படும் ஆவணம் (01 புள்ளி)
(ஆ) பொறுப்பு அதிகரித்தல் செலவு
பொறுப்பு குறைதல் வரவு (01 புள்ளி)
2. சொத்துக் கணக்குகள்:- கடன்பட்டோர் கணக்கு, கட்டிடக் கணக்கு
பொறுப்புக் கணக்குகள்:- வங்கிக்கடன் கணக்கு, அட்டுறுச் செலவுக் கணக்கு
வருமானக் கணக்குகள் :-விற்பனைக் கணக்கு, பெற்ற கழிவுக் கணக்கு
செலவுக் கணக்குகள்:- சம்பளக் கணக்கு, மின்சாரக் கட்டணக் கணக்கு (4×1/2=02 புள்ளிகள்)

3. (அ) பற்றுச் சீட்டு- காசேடு
கொடுப்பனவுக் கைச்சாத்து – வங்கிக் கணக்கு (2×1/2=01 புள்ளி)
(ஆ) 1) கொடுத்த கழிவு
பெற்ற கழிவு (2×1/2=01 புள்ளி)



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

2) கடன்கொடுத்தோர் கணக்கு வரவு
பெற்றகழிவுக் கணக்கு செலவு (01 புள்ளி)

4. காசுக் கணக்கு

| திகதி | ப.இ | விபரம் | பே | தொகை | திகதி | கை.இ | விபரம் | பே | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.01 | | மீதி | ½ | 120000 | 02.01 | | கொள்வனவு | | 40 000 |
| 03.01 | | வங்கிக் கடன் | | 25000 | 04.01 | | சம்பளம் | ½ | 20 000 |
| 05.01 | | கடன்பட்டோர் | ½ | 15000 | 07.01 | | மின்சாரம் | | 5 000 |
| 06.01 | | விற்பனை | | 50000 | | | மீதி சென்றது | ½ | 145 000 |
| | | | | 210000 | | | | | 210 000 |
| | | மீதி வந்தது | | 145000 | | | | | |

**வினா இல 07**

1. (அ) சில்லறைக் காசுக் கொடுப்பனவுகளை கட்டுப்பாடுகளுடன் மேற்கொள்வதற்காகப் பிரதான காசாளரினால் நியமிக்கப்படும் சில்லறைக் காசாளருக்கு ஏதேனும் சிறு செலவுகளை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் குறித்ததொகைப் பணத்தினைக் குறிக்கும். (01 புள்ளி)
(ஆ) வைப்புச்சீட்டு, கொடுப்பனவு கைச்சாத்து, வங்கிக்கூற்று, மறுக்கப்பட்ட காசோலைகள் தொடர்பான அறிவித்தல் (2×1/2=01 புள்ளி)

2. ரூ 1650 (02 புள்ளிகள்)

3. குமரன் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 01.02 | விற்பனை | | 10000 | | | | |

விற்பனை கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 01.02 | குமரன் | | 10000 |
| | | | | | காசு | | 24000 |

அமலன் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | கொள்வனவு | | 12 000 |

கொள்வனவுக் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 03.02 | அமலன் | | 12 000 | | | | |

காசுக் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 05.02 | விற்பனை | | 24 000 | | சம்பளம் | | 15 000 |

சம்பளக் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 07.02 | காசு | | 15 000 | | | | |

(ஒரு இரட்டைப்பதிவிற்கு 1 புள்ளி வீதம் (4×1=04 புள்ளிகள்)

4. வங்கிக்கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 01.04 | காசு | | 25000 | 20.04 | மின்சாரம் | 1 புள்ளி | 6000 |
| 07.04 | சரவணன் | 3 புள்ளி | 6000 | | மீதி சென்றது | | 50000 |
| 11.04 | விற்பனை | | 25000 | | | | |
| | | | 56000 | | | | 56000 |
| 01.05 | மீதி வந்தது | | 50000 | | | | |

Follow and Get papers Daily ..!

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page